**கவனிக்க.**- 15.10.2010 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**கவனிக்க.**- 21.10.2010 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி VI இல் 2010 ஆம் ஆண்டிற்கான பலப்பிட்டி நீதிமன்ற வலயத்தில் யூரிமார் மற்றும் விசேட யூரிமார் (சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் மட்டும் கடமையாற்றும்) பட்டியலொன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1677 - 2010 ඔක්තෝබර් මස 21 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.10.21**

*1677 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1494 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | – |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1497 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# பதவிகள் - வெற்றிடம்

## களுத்துறை பிரதேச சபை

களுத்துறை பிரதேச சபையில் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளமையால் கீழ் காணப்படும் பதவிக்காக தகுதியானவர்களை தெரிவுசெய்வதற்கு முறையான தகைமைகள் உள்ள களுத்துறை பிரதேச சபை நிர்வாக பிரதேசத்திற்குள் நிரந்தர வசிப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | பதவி எண்ணிக்கை | பதவிப் பெயர் | சம்பள முறை | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | 01 | வருமான நிர்வாகி II தரம் | ரூபா 12,940-120×10-140×11 210 × 10 - 290 × 10- ரூபா 20,660. 4 ஆவது சம்பள உயர்வுக்கு முன் வினைதிறன்காண் தடைப்பரீட்சை. | சிரேட்ட பாடசாலை தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த. (சா.தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது கணிதம்/கேத்திர கணிதம் வணிக இல. கணிதம்/கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி உட்பட 06 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல், மற்றும் மேல் மாகாணத்திற்குள் பிரதேச நிர்வாக நிறுவனங்களின் 05 வருட சேவை அனுபவத்துடன் நிரந்தர பதவி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது சிறந்த பாடநெறிக்கான பரீட்சையின் பெறுபேற்று பத்திரம் அல்லது க. பொ. த. (சா. தரம்) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாது கணிதம்/ முதல் கணிதம்/ வணிக இலக்க கணிதம்/கணிதம் மற்றும் சிங்களம்/தமிழ் மொழி உட்பட 05 பாடம் திறமை சித்தியுடன் 06 பாடம் சித்திபெற்றிருக்க வேண்டும். |

**தேர்ந்தெடுப்பதற்கான விதி முறைகள்:-**

(1) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் ;
(2) விண்ணப்பதாரர் மேல் மாகாண எல்லைக்குள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதிக்கு முன் 03 வருட நிரந்தர வதிவிடத்தை கொண்டிருத்தல் வேண்டும் ;
(3) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதிக்குள் 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு கூடாமலும் இருத்தல் வேண்டும் ;
(4) விண்ணப்பதாரர் நல்ல உடல் சுகாதாரத்துடன் காணப்படல் ;
(5) களுத்துறை பிரதேச சபையில் தற்பொழுது தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் விரும்பத்தக்க, பொறுப்பேற்கும் (வேலை ஒன்று) சேவை புரியும் சேவையாளர்கள் இருப்பின் முக்கியத்துவம் கொடுக்கப்படும் ;
(6) விண்ணப்பப்பத்திரம் விண்ணப்பித்ததன் பிறகு அல்லது பெறும் காலப்பகுதியில் இந்த தேர்ந்தெடுப்பு தாமதித்தல் அல்லது மாற்றம் ஏற்படுத்தல் விண்ணப்பத்தை நிராகரித்தல் அல்லது மீள் பரிசீலனை செய்தல் களுத்துறை பிரதேச சபையின் செயலாளர் உரித்தாகும்.

**சேவை வழங்கப்படும் விதிமுறைகள் :**

(1) இந்த நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியத்திற்கு உரித்துடையது ;
(2) நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது ;
(3) இத்தெரிவு செய்யும் முறை, விதி முறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அப்பால், இலங்கை தாபனவிதிக்கோவை விதி முறைகளுக்கும், அரச திணைக்கள கட்டளைகளுக்கும், மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு அல்லது களுத்துறை பிரதேச சபையினால் தொடர்ந்து வெளியிடப்படும் விதிமுறைகள் மற்றும் கட்டளைகளுக்கும் ஏற்றவாறு நடப்பதற்கு உடன்படல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**.- இந்த அறிவித்தலில் உள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக 12" × 8" அளவில் விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட்டு விண்ணப்பிக்கும் வெற்றிட பெயரை உரிய கவரில் இடது பக்கம் எழுதி 2010.11.09 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், களுத்துறை பிரதேச சபை, காலி வீதி, வஸ்கடுவ", என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பத்துடன் கீழ்க் காணப்படும் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ் ;
(3) வதிவிட உறுதி சான்றிதழ் ;

(4) அண்மையில் பெற்ற கிராம சேவகர் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெறப்பட்ட நற்குண சான்றிதழ் இரண்டு.

கீதானி டி லொகுவெல்ல,
செயலாளர்,
களுத்துறை பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**களுத்துறை பிரதேச சபை**

..................................... பதவி

1. (அ) முதல் எழுத்துடன் பெயர் :-----.
(ஆ) முழுப்பெயர் :-----.
2. முகவரி :-----.
3. பிறந்த திகதி :- வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.
4. பெண்/ஆண் :-----.
5. திருமணமானவர் /திருமணமாகாதவர் :-----.
6. இனம் :-----.
7. நீங்கள் இலங்கைப் பிரசையா? அப்படியானால் பரம்பரை வழியாகவா? பதிவு செய்யப்பட்டவரா என்பது :-----.
8. கல்வித் தகுதிகள் :-----.
9. நீங்கள் தற்பொழுது கீழ்காணும் அடிப்படையில் சேவையில் உள்ளவராயின் சேவை காலம் மற்றும் விபரம் :-----.
(நிரந்தரம்/ஒப்பந்த அடிப்படை/தற்காலிகம்/மாதிரி/சலுகை அடிப்படையிலா?)

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் சத்தியமானதும் உண்மையானதும் என உறுதிபடுத்துகிறேன். இந்த தேர்ந்தெடுப்பு முறை பற்றி விதிமுறைகளின்படி என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானவை என தெரியவரும் சந்தர்ப்பத்தில் தேர்வுக்கு முன்னரும் நியமனம் பெற்ற பின்னரும் சேவையில் இருந்து நீக்குவதற்கு அடிபணிவேன் என அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-750

---

**நிந்தவூர் பிரதேச சபை**

நிந்தவூர் பிரதேச சபையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு நிந்தவூர் பிரதேச சபை அதிகாரப்பகுதிக்குள் நிரந்தரமாக வசிக்கும் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது :

| பதவி வகை | எண்ணிக்கை | மாதாந்த சம்பளம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| நூலக சேவகர் | 03 | ரூபா 11,730-10×120 - 10× 130-10×145 - 12 × 160 - ரூபா 17,600 | 8 ஆம் தரம்/9 ஆம் ஆண்டு சித்தி |

1. **தேவையான தகைமைகள் :-**

(1) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியன்று 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் (தற்போது அரச மாகாண சபைகளில் பணிபுரிவோர்க்கு இது பொருந்தாது) ;

(2) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பதாரி நிந்தவூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக வசித்திருத்தல் (தேர்தல் இடாப்பு மூலமோ அல்லது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை வைத்திருத்தல்) ;

(4) விண்ணப்பதாரி ஏற்றுக்கொள்ளக்கூடிய நல்ல குணங்களையும் தேகாரோக்கியமுடையவராகவும் இருத்தல் வேண்டும் ;

(5) விண்ணப்பதாரி நீதிமன்றத்தினால் எவ்வித குற்றங்களுக்கும் உள்ளாகாதவராக இருத்தல் ;

(6) நிந்தவூர் பிரதேச சபையில் தற்போது நிரந்தர/தற்காலிக/சமயோசித/ஒப்பந்த தொண்டர் அடிப்படையில் கடமையாற்றுவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(7) விண்ணப்பப்படிவத்தை ஏற்றபின் விண்ணப்பதாரிகளை சேர்த்துக்கொள்வதோ காலந்தாழ்த்துவதோ மாற்றம் செய்யும் அல்லது இல்லாமல் செய்யும் உரிமை நிந்தவூர் பிரதேச சபை செயலாளரைச் சார்ந்தது.

**2. சேவையின் நிபந்தனைகள் :**

(1) இத்தொழில் நிரந்தரமானது ;
(2) விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவுடன் கூடியது ;
(3) இப்பதவி மூன்று வருட தகுதிகாண் காலத்தைக்கொண்டது ;
(4) இப்பதவி அரச திணைக்களங்களின் தொழிலுக்கான ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டதோடு கிழக்கு மாகாண சபையினால் அவ்வப்போது மாற்றப்படும் சட்டக்கோவைகளுக்கு கட்டுப்பட்டதுமாகும்.

**3. ஆட்சேர்ப்பு முறை :**

(1) நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர் ;
(2) விண்ணப்பத்துடன் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்புவதோடு நேர்முகப்பரீட்சையின்போது அப்பிரதிகளின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-
* பிறப்புச்சான்றிதழ் ;
* கல்விச்சான்றிதழ் ;
* வசிப்பிடத்தை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் இடாப்பின் பிரதி அல்லது பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ;
* தொழில் தகைமை அனுபவம் சம்பந்தமான சான்றிதழ்கள் இருப்பின் அச்சான்றிதழ்.

4. அடிப்படைத்தகைமைகள் இருக்கும் விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு சேர்த்துக்கொள்ளப்படுவர்.

5. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பித்தல்**.- விண்ணப்பதாரர்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய ஒழுங்குமுறைப்படி பூர்த்தி செய்து 2010.10.25 ஆந் திகதிக்கு முன் அல்லது அத்தினத்தன்று கிடைப்பதற்கு நிந்தவூர் பிரதேச சபை முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக எழுதுதல் வேண்டும். முழுமையற்ற விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

எம். ஏ. எம். தாஹிர்,
தவிசாளர்,
நிந்தவூர் பிரதேச சபை.

நிந்தவூர் பிரதேச சபை,
நிந்தவூர்,
2010.09.30 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நிந்தவூர் பிரதேச சபை**

**நூலக சேவகர் பதவி**

1. விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் :-----.
   முதல் எழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.
2. தபால் முகவரி :-----.
3. பிறந்த திகதி :- வருடம் :-----, மாதம் :-----, திகதி :-----.
4. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு வயது :-
   வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
5. திருமணமானவரா /திருமணமாகாதவரா ? :-----.

6. இனம் :-----.
7. நீங்கள் இலங்கைப் பிரசையா? :-----.
ஆம் எனில், பரம்பரையினாலா/பதிவினாலா என்பது :-----.
8. கல்வித்தகைமைகள் :-----.
9. தொழிற்தகைமைகள் :-----.
10. நீங்கள் தற்போது இந்த பிரதேச சபையில் வேலை செய்பவராக இருந்தால்
I. இப்போது வகிக்கும் பதவி :-----.
II. இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
III. இந்த நியமனத்தின் தன்மை (நிரந்தரம்/தற்காலிகம்/பகுதிநேரம்/ஒப்பந்தம்/தொண்டர்) :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையென உறுதிப்படுத்துகிறேன். மேலும் வழங்கப்பட்ட தகவல்கள் நியமனத்தின் பின் பொய்யானதென உறுதிப்படுத்தப்பட்டால் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவதோடு நஷ்டயீடாக எந்தக்கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10-805

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கடுவெல பிரதேச சபை

கடுவெல பிரிவு அதிகார பிரதேசம்

### அட்டவணை I

| தொ. இல. | வீதியின் பெயர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | வீதியின் தன்மை | | | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தார் | கிறவல் | கொன் கிரீட் | | | |
| 1 | அசோகாராம மாவத்தையில் திரும்பிச் செல்லும் எலிசபத் எஸ்டேட் I ஆவது ஒழுங்கை | 6.0 | 198.0 | 198.0 | - | - | அசோகாராம பாதை | இல. 325/1/36. 325/1/50 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 2 | அசோகாராம மாவத்தையில் திரும்பிச் செல்லும் II ஆவது ஒழுங்கை | 195.0 | 6.0 | - | 50.0 | 145.0 | அசோகாராம பாதை | இல. 325/1/19, இல. 325/1/28 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 3 | அசோகாராம மாவத்தையில் திரும்பிச் செல்லும் I ஆவது ஒழுங்கை இல. 325/6 அருகில் செல்லும் III ஆவது ஒழுங்கை | 45.0 | 6.0 | - | 45.0 | - | எலிசபெத் எஸ்டேட் 1 ஆவது ஒழுங்கை 325/1/6 லிருந்து | 11 ஆவது ஒழுங்கை 325/1/51 வரை | ஈ |
| 4 | நவகமு மயானத்திற்கு செல்லும் மாவத்தை | 100.0 | 3.70 | 100.0 | - | - | 143 பஸ் வீதி மற்றும் நவகமுவ அருகில் கூட்டுறவு கோப் சிட்டி மற்றும் இல. 221 | பொது மயானத்தின் புதிய பால முகம் | ஈ |
| 5 | மாலபேயிலிருந்து அத்துருகிரிய பாதை 7ஆவது ஒழங்கை | 82.0 | 4.90 | - | 82.0 | - | அத்துருகிரிய இல. 170 பஸ் வீதி | இல. 544/4 உட்பட வீதியின் முடிவு | ஈ |

| தொ. இல. | வீதியின் பெயர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | வீதியின் தன்மை | | | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தார் | கிறவல் | கொன் கிரீட் | | | |
| 6 | மாலபேயிலிருந்து அத்துருகிரிய பாதை 9 ஆவது ஒழுங்கை | 86.0 சுற்று வட்டம் | 4.30 | - | - | 86.0 சுற்று வட்டம் | அத்துருகிரிய இல. 170 பஸ் வீதி | இல. 592/2 மற்றும் வீதியின் கடைசி சுற்றுவட்டம் | ஈ |
| 7 | மாலபேயிலிருந்து அத்துருகிரிய பாதை 11 ஆவது ஒழுங்கை | 40.0<br>76.0<br>50.0<br>40.0 | 3.60<br>4.0<br>4.60<br>3.0 | - | 206.0 | - | அத்துருகிரிய இல. 170 பஸ் வீதி | இல. 579/3, இல. 579 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 8 | மாலபே அத்துருகிரிய பாதை 12 ஆவது ஒழுங்கை | 35.0<br>72.0<br>50.0 சுற்று வட்டம் | 3.0<br>3.70<br>4.60 | - | 157.0 | - | அத்துருகிரிய இல. 170 பஸ் வீதி | இல. 622, 622/பீ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 9. | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை 1 ஆவது ஒழுங்கை | 38.0 | 3.70 | - | 38.0 | - | சமகி மாவத்தை | இல. 290/6/பீ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 10 | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை II ஆவது ஒழுங்கை | 110.0 | 4.70 | - | 110.0 | - | சமகி மாவத்தை | இல. 294/1/பீ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 11 | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை III ஆவது ஒழுங்கை | 40.0 | 3.0 | - | 40.0 | - | சமகி மாவத்தை | வீதியின் முடிவு | ஈ |
| 12 | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை IV ஆவது ஒழுங்கை | 80.0 சுற்று வட்டம் | 3.70 | - | 80.0 சுற்று வட்டம் | - | சமகி மாவத்தை | இல. 297/பீ உட்பட சுற்று வட்டம் | ஈ |
| 13 | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை சாந்தி நிவாச பாதை | 62.0 சுற்று வட்டம் | 3.0 | - | - | 62.0 சுற்று வட்டம் | சமகி மாவத்தை | இல. 300/2/3 உட்பட சுற்று வட்டம் | ஈ |
| 14 | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை திலினபிம ஒழுங்கை | 38.0<br>54.0<br>23 | 6.0<br>3.70<br>3.0 | 38.0 | - | 77 | சமகி மாவத்தை | இல. 296/25, 296/26, 296/1/ஏ உட்பட முடிவு | ஈ |
| 15 | சமகி மாவத்தை திலினபிம ஒழுங்கையில் இல. 296/26 அருகில் செல்லும் I ஆவது உப வீதி | 130.0<br>33.0 | 6.0<br>6.0 | - | 163.0 | - | சமகி மாவத்தை திலினபிம ஒழுங்கை | இல. 299/2/1, 299/1/4/ஏ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 16 | சமகி மாவத்தை திலினபிம ஒழுங்கை இல. 279/2/1 அருகில் செல்லும் II உப வீதி | 65.0 | 3.0 | - | 65.0 | - | சமகி மாவத்தை திலினபிம ஒழுங்கை | இல. 299/2/1, 299/1/4/ஏ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 17 | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை 6 ஆவது ஒழுங்கை | 78.0<br>20.0 | 3.0<br>4.10 | - | 98.0 | - | சமகி மாவத்தை திலினபிம ஒழுங்கை | இல. 304/3, 304/ஏ/5 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 18 | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை 7 ஆவது ஒழுங்கை | 102.0 | 4.0 | 102.0 | - | - | சமகி மாவத்தை | இல. 306/4, 306/5 உட்பட வீதியின் முடிவு | ஈ |

| தொ. இல. | வீதியின் பெயர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | வீதியின் தன்மை தார் | கிறவல் | கொன் கிரீட் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19 | ஹேவாகம ராஜசிங்க மாவத்தையில் சமகி மாவத்தை 8 ஆவது ஒழுங்கை | 47.0 | 3.0 | - | 47 | - | சமகி மாவத்தை | இல. 299/பீ/2 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 20 | பஹல பொம்ரிய மேதானந்த மாவத்தையில் திரும்பிச் செல்லும் கொத்தலாவல மாவத்தை | 170.0 சுற்று வட்டம் | 3.70 | 50.0 | 120.0 | - | மேதானந்த மாவத்தை | இல. 164,163/1உட்பட சுற்றுவட்டம் | ஈ |
| 21 | பஹல பொம்ரிய மேதானந்த மாவத்தையில் திரும்பிச் செல்லும் கொத்தலாவல மாவத்தை 1 ஆவது ஒழுங்கை | 96.0 | 3.70 | 10.0<br>39.0 | - | 47.0 | கொத்தலாவல மாவத்தை | இல. 173/1, 173 மற்றும் 168/1 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 22 | பஹல பொம்ரிய மேதானந்த மாவத்தையில் திரும்பிச் செல்லும் கொத்தலாவல மாவத்தை 2 ஆவது ஒழுங்கை | 148.0 சுற்று வட்டம் | 3.7 | | 10.0 | 138.0 | கொத்தலாவல மாவத்தை | இல. 163/1/0, 163 /டீ 163/ஜீ மற்றும் சுற்றுவட்டம் உட்பட சுற்றுவட்டம் | ஈ |

**அட்டவணை II**

*கடுவெல பிரதேச சபை*

***பத்தரமுல்ல பிரிவு அதிகார பிரதேசம்***

| தொ. இல. | வீதியின் பெயர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | வீதியின் தன்மை தார் | கிறவல் | கொன் கிரீட் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | அக்கோன வல்பொல பாதையில் I ஆவது ஒழுங்கை | 90.0 | 6.0 | 90.0 | - | - | வல்பொல பாதை | இல. 7, 6/7 உட்பட முடிவு | ஈ |
| 2 | அக்கோன வல்பொல பாதையில் கொட்டிகல மாவத்தை | 200.0 | 4.50 | 200.0 | - | - | வல்பொல பாதை | இல. 16/7 உட்பட வீடு மற்றும் முடிவு | ஈ |
| 3 | அக்கோன வல்பொல பாதையில் கொட்டிகல மாவத்தை, I ஆவது ஒழுங்கை | 120.0 | 3.70 | - | 120.0 | - | கொட்டிகல மாவத்தை | இல. 14/4 உட்பட வீடு மற்றும் முடிவு | ஈ |
| 4 | அக்கோன வல்பொல பாதையில் கொட்டிகல மாவத்தை, II ஆவது ஒழுங்கை | 150.0 | 3.70 | 150.0 | - | - | கொட்டிகல மாவத்தை | இல. 15/8/A வீதியின் முடிவு | ஈ |
| 5 | அக்கோன வல்பொல பாதையில் மல்வத்த இடம் வீதி | 168.0<br>சுற்று<br>வட்டம்<br>21.0<br>30.0 | 4.50<br>15.0<br>4.20<br>4.50 | -<br>221<br>சுற்று<br>வட்டம்<br>- | -<br>-<br>-<br>- | -<br>-<br>-<br>- | வல்பொல வீதி | இல. 16/4 உட்பட கொட்டிகல மாவத்தை | ஈ |
| 6 | அக்கோன தபோவனய பாதையில் I ஆவது குறுக்கு பாதையில் 463/2, 46A அருகில் செல்லும் I ஆவது உப வீதி | 59.0<br>15.0<br>22.0 | 3.0<br>2.50<br>2.50 | -<br>-<br>- | -<br>-<br>- | 59.0<br>15.0<br>22.0 | 1 ஆவது குறுக்கு வீதி | தபோவனய பாதை | ஈ |

| தொ. இல. | வீதியின் பெயர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | வீதியின் தன்மை | | | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தார் | கிறவல் | கொன் கிரீட் | | | |
| 7 | அக்கோன தபோவனய பாதையில் I ஆவது குறுக்கு பாதையில் 465/3, அருகில் செல்லும் I ஆவது உப வீதி | 35.0 | 2.50 | - | - | 35.0 | 1 ஆவது குறுக்கு வீதி | இல. 456/6 உட்பட வீடுகள் | ஈ |
| 8 | களபளுவாவ ஜய மாவத்தை | 129.0<br>34.0 | 6.60<br>4.30 | -<br>- | 263.0<br>- | -<br>- | வீதி இல. 152 பஸ் வீதி | இல. 398, 395/5 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 9 | களபளுவாவ எக்சத் மாவத்தையில் இல. 391/பீ அருகில் செல்லும் ஒழுங்கை | 105.0 | 4.00 | - | 105.0 | - | எக்சத் மாவத்தை | இல. 391/எவ் உட்பட வீடுகள் மற்றும் வீதியின் முடிவு | ஈ |
| 10 | களபளுவாவ எக்சத் மாவத்தையில் இல. 389/ஈ அருகில் செல்லும் ஒழுங்கை | 97.0 | 3.70 | - | 97.0 | - | எக்சத் மாவத்தை | இல. 389/சீ உட்பட வீடுகள் மற்றும் வீதியின் முடிவு | ஈ |
| 11 | களபளுவாவ எக்சத் மாவத் தையில் இல. 646/2 முன்பான பாதையில் இல. 650 வரை உள்ள ஒழுங்கை | 66.0 | 4.60 | 66.0 | - | - | எக்சத் மாவத்தை | இல. 650 உட்பட வீடுகள் மற்றும் வீதியின் முடிவு | ஈ |
| 12 | களபளுவாவ எக்சத் மாவத் தையில் இல. 648/10 முன்பாக செல்லும் ஒழுங்கை | 78.0 | 3.70 | - | 78.0 | - | எக்சத் மாவத்தை | இல. 648/11 உட்பட வீடுகள் மற்றும் வீதியின் முடிவு | ஈ |
| 13 | களபளுவாவ எக்சத் மாவத் தையில் பொது கிணறு முன்பாக இல. 646/12 வரை உள்ள வீதி | 189.0 | 4.60 | - | 189.0 | - | எக்சத் மாவத்தை | இல. 650/கே, 641, 646/6 வீதியின் வீதி மு டிவு | ஈ |
| 14 | களபளுவாவ எக்சத் மாவத் தையில் 2 ஆவது ஒழுங்கை 651/சீ உப வீதி | 35.0 | 4.50 | - | - | 35.0 | எக்சத் மாவத்தை 2 ஆவது ஒழுங்கை | இல. 651/2 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 15 | களபளுவாவ எக்சத் மாவத் தையில் 2 ஆவது ஒழுங்கை 652 அருகில் செல்லும் உப வீதி | 43<br>18.0 | 4.50<br>3.00 | -<br>- | -<br>- | 61.0 | எக்சத் மாவத்தை 2 ஆவது ஒழுங்கை | இல. 652 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 16 | அக்கோன ருவன்புர இல. 500/69 வரை உள்ள உப வீதி | 40.0 | 5.50 | - | 40.0 | - | ருவன்புர பிரதான வீதி | இல. 500/69 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 17 | களபளுவாவ மண்டாவில வீதி இல. 654/10 அருகில் உப வீதி | 144.0 | 6.20 | - | 144.0 | - | மண்டாவில வீதி இல. 654/8 அருகில் செல்லும் வீதி | இல. 654/12, 13 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 18 | களபளுவாவ மண்டாவில வீதி இல. 656/6 வரை உள்ள உப வீதி | 75.0 | 5.0 | - | 75.0 | - | மண்டாவில வீதி | இல. 656/7, 656/6 உட்பட வீடுகள் மற்றும் வீதியின் முடிவு | ஈ |

| தொ. இல. | வீதியின் பெயர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | வீதியின் தன்மை | | | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தார் | கிறவல் | கொன் கிரீட் | | | |
| 19 | களபளுவாவ ஹல்காதெனிய ஐ. டீ. எச் வீதி இல. 610/10 அருகில் செல்லும் 1 வது ஒழுங்கை | 68.0<br>23.0 | 4.00<br>3.70 | - | 91.0 | - | ஹல்காதெனிய ஐ. டீ. எச் வீதி | இல. 611/ஜீ உட்பட வீடுகள் மற்றும் முடிவு | ஈ |
| 20 | களபளுவாவ ஹல்காதெனிய ஐ. டீ. எச். வீதி இல. 619 வரை உள்ள 2 ஆவது ஒழுங்கை | 43.0 | 3.70 | - | 43.0 | - | ஹல்காதெனிய ஐ. டீ. எச். வீதி | இல. 619 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 21 | ஹல்காதெனிய வீதி இல. 605 அருகில் செல்லும் தொடம்கஹாஹேன பாதை | 139.0 | 4.60 | 139.0<br>0 | - | - | ஹல்காதெனிய பாதை | இல. 603/4 தொடர் வீதியின் முடிவு | ஈ |
| 22 | களபளுவாவ பாடசாலை மாவத்தையில் இல. 331 அருகில் செல்லும் வீதி | 54.0 | 3.90 | - | 54.0 | - | களபளுவாவ பாடசாலை மாவத்தை | இல. 332/4 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 23 | களபளுவாவ பாடசாலை மாவத்தையில் இல. 332/பீ/6 அருகில் செல்லும் வீதி | 66.0 | 4.70 | - | 66.0 | - | களபளுவாவ பாடசாலை மாவத்தை | இல. 331/5 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 24 | களபளுவாவ பாடசாலை மாவத்தையில் இல. 332/பீ/4 அருகில் செல்லும் வீதி | 96.0 | 6.00 | - | - | 96.0 | களபளுவாவ பாடசாலை மாவத்தை | இல. 332/பீ/1 இல. 335 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 25 | களபளுவாவ பாடசாலை மாவத்தையில் இல. 334/சீ வரை செல்லும் வீதி | 95.0 | 3.00 | - | - | 95.0 | களபளுவாவ பாடசாலை மாவத்தை | இல. 334/சீ, 334/பீ உட்பட வீடுகள் மற்றும் வீதியின் முடிவு | ஈ |
| 26 | களபளுவாவ பாடசாலை மாவத்தையில் தர்ம விகார மாவத்தை இல. 52/6/சீ அருகில் செல்லும் வீதி | 154.0 | 4.60 | - | 54.0 | 100.0 | தர்ம விகார மாவத்தை | இல. 340/4, உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 27 | களபளுவாவ பாடசாலை மாவத்தையில் குருந்த 1வது ஒழுங்கை | 61.0 | 6.00 | - | - | 61.0 | பாடசாலை மாவத்தை | இல. 342/ஏ, உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 28 | நெலும் இடத்தில் இருந்து களுபளுவாவ 1வது ஒழுங்கை வரை இருக்கும் வீதி | 325.0 | 4.70 | 325.0 | - | - | நெலும் இடத்தில் இருந்து 1வது ஒழுங்கை வரை உள்ள வீதி | களபளுவாவ 1வது ஒழுங்கை | ஈ |
| 29 | நெலும் இடத்தில் இருந்து களபளுவாவ I ஆவது ஒழுங்கை வரை இருக்கும் வீதியில் 1வது ஒழுங்கை | 49.0 | 3.00 | - | 49.0 | - | நெலும் இடத்தில் இருந்து 1வது ஒழுங்கை வரை உள்ள வீதி | இல. 212/பீ | ஈ |
| 30 | நெலும் இடத்தில் இருந்து இல. 202/ஏ அருகில் செல்லும் II வது ஒழுங்கை | 108.0 | 3.00 | - | - | 108.0 | நெலும் இடத்தில் இருந்து 1வது ஒழுங்கை வரை இருக்கும் வீதி | இல. 209/4 | ஈ |
| 31 | நெலும் இடத்தில் இருந்து III ஆவது ஒழுங்கை | 107.0 | 3.60 | - | 1070 | - | நெலும் இடத்தில் இருந்து 1 வது ஒழுங்கை வரை இருக்கும் வீதி | இல. 202/4 | ஈ |
| 32 | நெலும் இடத்தில் இருந்து இல. 202/ஏ அருகில் இருக்கும் IV வது ஒழுங்கை | 85.0 | 6.60 | - | 85.0 | - | நெலும் இடத்தில் இருந்து 1வது ஒழுங்கை வரை இருக்கும் வீதி | வீதியின் முடிவு | ஈ |
| 33 | நெலும் இடத்தில் இருந்து 200/3/எவ் அருகில் இருக்கும் V ஒழுங்கை | 84.0 சுற்று வட்டம் | 3.70 | - | 84.0 | - | நெலும் இடத்தில் இருந்து 1 வது ஒழுங்கை வரை இருக்கும் வீதி | இல. 330/3/டீ சுற்றுவட்டம் மற்றும் இல. 200/3/சீ உட்பட முடிவு | ஈ |

| தொ. இல. | வீதியின் பெயர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | வீதியின் தன்மை தார் | கிறவல் | கொன் கிரீட் | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 34 | நெலும் இடத்தில் இருந்து களபளுவாவ 1வது ஒழுங்கை வரை இருக்கும் விதியின் VI வது ஒழுங்கை | 56.0<br>196.0 | 3.00 | - | 56.0 | - | நெலும் இடத்தில் இருந்து 1 வது ஒழுங்கை வரை இருக்கும் வீதி | களபளுவாவ 1 வது ஒழுங்கை | ஈ |
| 35 | பட்டபொத்த ரொபட் குணவர்தன மாவத்தையில் ரஞ்சன் பேக்கரி அருகில் செல்லும் இல. 303/1 வரை இருக்கும் உப வீதி | 224.0 | 3.0 | - | - | 224.0 | ரொபட் குணவர்தன மாவத்தை | இல. 303/1 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 36 | பட்டபொத்த பழைய வீதி பொது கிணறுக்கருகில் திரும்பிச் செல்லும் இல. 247/பீ, வரையுள்ள உப வீதி | 149.0<br>50 0 | 4.0<br>3 0 | - | 66.0 | 133.0 | பட்டபொத்த பொதுக்கிணறு பாதை | இல. 249/2, 248/1, 248/2 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 37 | பட்டபொத்த ரொபட் குணவர்தன மாவத்தையில் இல. 272 அருகில் செல்லும் உப வீதி | 86.0 | 3.0 | - | 86.0 | - | பட்டபொத்த ரொபட் குணவர்தன மாவத்தை | இல. 272/பீ, 272/2/பீ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 38 | அக்குரேகொட செத்மக மாவத்தை | 72.0 | 6.0 | - | - | 72.0 | பட்டபொத்த ரொபட் குணவர்தன மாவத்தை | இல. 450/சீ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 39 | அக்குரேகொட வயல் வீதி இல. 450/9 அருகில் செல்லும் உப வீதி | 230.0 | 3.70 | - | 166.0 | 53.0 | அக்குரேகொட வயல் வீதி | இல. 370/1, 376/1, 370/1/ஏ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 40 | அக்குரேகொட வயல் வீதி மைத்ரி இடம் | 152.0 | 5.70 | - | 117.0 | 35.0 | அக்குரேகொட வயல் வீதி | இல. 43/1/5, 43/4/ஏ 43/1/7 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 41 | அக்குரேகொட தர்மாயத்தன மாவத்தையில் திரும்பிச் செல்லும் வீரவிகும் மாவத்தை | 195.0 | 4.60 | - | - | 195.0 | அக்குரேகொட வயல் வீதி | இல. 538/ஏ, 539/ஏ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 42 | தலங்கம கொஸ்வத்த மில்லகஹாவத்த பாதை | 144.0<br>69.0<br>25.0<br>சுற்று வட்டம் | 6.0<br>6.0<br>4.70 | 144.0<br>-<br>25.0 | 69.0<br>சுற்று<br>வட்டம்<br>- | -<br>- | தலங்கம கொஸ்வத்த பய்ப்ப வீதி | இல. 240/எவ், 240/எவ்/1 சுற்று வட்டம் மற்றும் 240/1 உட்பட முடிவு | ஈ |
| 43 | தலங்கம தெற்கு மகிந்தவத்த I வது ஒழுங்கை | 107.0<br>65.0<br>41.0 | 4.60<br>4.30<br>4.20 | - | - | 167.0<br>0 | பன்னிபிட்டிய பாதை லியனகே ஸ்டோர்ஸ் | இல. 1050/1/ஏ, இல. 1050/1 உட்பட முடிவு | ஈ |
| 44 | தலங்கம தெற்கு மகிந்தவத்த II வது ஒழுங்கை | 18.0<br>116.0<br>சுற்று வட்டம் | 5.60<br>4.60 | - | - | 175.0 | மகிந்தவத்த I ஆவது ஒழுங்கை மற்றும் பன்னிபிட்டிய பாதை 1052 எப்ர்னோவா அருகிலிருந்து | வீதியில் 1049,1054 உட்பட கடைசி சுற்று வட்டம் | ஈ |
| 45 | தலங்கம தெற்கு சிறி சுமன பிரிவென வரை உள்ள ஸ்ரீ பௌத்தாராம மாவத்தை | 290.0 | 6.0 | 290.0 | - | - | 174 பஸ் வீதி | சிறி சுமன பிரிவென | ஈ |
| 46 | பொத்துஅராவ அலுபோகஹாவத்த பாதை | 107.0 | 4.60 | - | - | 107.0 | பொத்துஅராவ பாதை | இல. 1053/4 உட்பட வீடுகள் | ஈ |

**அட்டவணை III**

*கடுவெல பிரதேச சபை*

***அத்துருகிரிய பிரிவு அதிகார பிரதேசம்***

| தொ. இல. | வீதியின் பெயர் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | வீதியின் தன்மை | | | வீதியின் ஆரம்பம் | வீதியின் முடிவு | தரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தார் | கிறவல் | கொன் கிரீட் | | | |
| 1 | ஒருவல பாடசாலை மாவத்தையில் 1 ஆவது ஒழுங்கை | 93.0 | 4.60 | - | 93.0 | - | பாடசாலை மாவத்தையில் இல. 59, மிலேனியம் ஹாட்வெயார் | இல. 59/9, ரன்சிறி ஹாட்வெயார் மற்றும் மிலேனியம் எக்ரோ என்டர்பிரைஸஸ் | ஈ |
| 2 | ஒருவல பாடசாலை மாவத்தையில் II ஆவது ஒழுங்கை | 48.0<br>45.0<br>34.0<br>30 சுற்று வட்டம் | 3.70<br>4.30<br>4.60 | - | 37.0 சுற்று வட்டம் | 90.0 | ஒருவல பாடசாலை மாவத்தை 61/டீ/1 | இல. 61/5, இல. 61/9 உட்பட சுற்று வட்டம் | ஈ |
| 3 | ஒருவல பாடசாலை மாவத்தையில் III ஆவது ஒழுங்கை | 112.0 | 4.60 | - | 112.0 | - | ஒருவல பாடசாலை மாவத்தை இல. 61/பீ | இல. 61/8 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 4 | ஒருவல பாடசாலை மாவத்தையில் IV ஆவது ஒழுங்கை | 130.0 | 3.0 | - | 130.0 | - | ஒருவல பாடசாலை மாவத்தை இல. 62/2 | இல. 63/3, இல. 63, 63/5/ஏ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 5 | ஒருவல பாடசாலை மாவத்தையில் V ஆவது ஒழுங்கை | 72.0<br>72.0 | 6.0<br>4.70 | - | 144.0 | - | ஒருவல பாடசாலை மாவத்தை | இல. 66/3, இல. 67/1 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 6 | ஒருவல பாடசாலை மாவத்தையில் மெத்செவன தர்மாயதன மாவத்தை | 145.0 | 4.0 | - | 145.0 | - | ஒருவல பாடசாலை மாவத்தை இல. 69/ஏ | இல. 69/2/பீ இல. 69/6 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 7 | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தையில் இல. 148 அருகில் செல்லும் உப வீதி | 88.0 | 3.0 | - | - | 88.0 | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை | வீதியின் முடிவு | ஈ |
| 8 | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தையில் இல. 147/டீ/3 அருகில் செல்லும் உப வீதி | 72.0 | 3.70 | - | 72.0 | - | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை | இல. 147/டீ, இல. 147 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 9 | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை II ஆவது ஒழுங்கை | 180.0 | 6.0 | 180.0 | - | - | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை | இல. 147/19, 147/16/பீ 147/16, 147/6 உட்பட கடைசி போக்கு | ஈ |
| 10 | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை II ஆவது ஒழுங்கை | 120.0 | 3.70 | - | 120.0 | - | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை | இல. 147/20/2/பீ உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 11 | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை IV ஆவது ஒழுங்கை | 117.0 | 5.50 | 117.0 | - | - | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை | இல. 143/டி/3, 143/டீ/4 உட்பட வீதியின் முடிவு | ஈ |
| 12 | வதுரன்முல்ல ராஜசிங்க மாவத்தை (பிரதான வீதி) | 290.0<br>31.0<br>58.0<br>30.0<br>118.0<br>225.0<br>75.0<br>105.0<br>170.0 | 6.0<br>6.60<br>5.50<br>4.60<br>5.20<br>6.0<br>4.80<br>6.20<br>9.0 | 1072.0 | 30.0 | - | 697 இல. 697 பஸ்வீதி | இல. 146/ஈ/8, இல. 146/ஈ/9 உட்பட வீதியின் முடிவு | ஈ |

10-652

**பூஜாபிட்டிய பிரதேச சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டமூலத்தின் 24 (3) ஆவது பிரிவின் கீழான அறிவித்தல்*

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2010, மாச்சு மாதம் 26 ஆந் திகதியைக் கொண்ட வர்த்தமானியின் IV (ஆ) பிரிவில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய பூஜாபிட்டிய பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ளதும் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுமான பாதைகள் தொடர்பாக எவ்வித எதிர்ப்புக்களும் முன்வைக்கப்படாததனால் குறித்த பாதைகள் பூஜாபிட்டிய பிரதேச சபைக்குச் சொந்தமானவையென இத்தால் வெளிப்படுத்திக் கொள்கின்றேன்.*

*அனுர ஹேமந்த விஜேரத்ன,*
*தலைவர்,*
*பூஜாபிட்டிய பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*பூஜாபிட்டிய,*
*2010.09.27.*

**அட்டவணை**

*பாதையின் பெயர்* : பட்டுகொட அஞ்சல் அலுவலகப் பாதையிலிருந்து பட்டுகொட ஊடாக ஜயசுந்தராராமய விகாரைக்குச் செல்லும் பாதை.

| இடது பக்கம் | வலது பக்கம் | பாதையின் அகலம் (அடி) | பாதையின் நீளம் (அடி) |
|---|---|---|---|
| திரு. ரீ. ஜீ. குணசிங்ஹ என்பவருக்குச் சொந்தமான புஸ்ஸேபிட்டிய வத்த | திரு. ரீ. ஜீ. எஸ். குணசிங்ஹ என்பவருக்குச் சொந்தமான புஸ்ஸேபிட்டிய வத்த | 08 | 620 |
| திரு. பி. ஜீ. ஜயதிஸ்ஸ என்பவருக்குச் சொந்தமான புஸ்ஸேபிட்டிய ஹிட்டினாவத்த | திரு. பி. ஜீ. ஜயதிஸ்ஸ என்பவருக்குச் சொந்தமான புஸ்ஸேபிட்டிய ஹிட்டினாவத்த | | |
| திரு. டப்ளியூ. தினேஷ் பர்னாந்து என்பவருக்குச் சொந்தமான புஸ்ஸேபிட்டிய ஹிட்டினாவத்த | திரு. எல். ஜீ. நந்தசிரி என்பவருக்குச் சொந்தமான கெலியல அங்க கும்புற | | |
| திரு. பி. ஜீ. ஜயவர்தன என்பவருக்குச் சொந்தமான புஸ்ஸேபிட்டிய ஹிட்டினாவத்த | திரு. டப்ளியூ. எல். ஞானதிலக்க என்பவருக்குச் சொந்தமான புஸ்ஸேபிட்டிய வத்த | | |
| திரு. எம். பி. உபாலி பர்னாந்து என்பவருக்குச் சொந்தமான கெலியல அங்க கும்புற | பி. ரீ. தயாவதி என்பவருக்குச் சொந்தமான புஸ்ஸேபிட்டிய கெதர காணி | | |

*பாதையின் பெயர்* : பிஹில்லதன்ன பாதை
*ஆரம்பிக்கும் இடம்* : கொரக்காகொல்ல பாதை
*முடிவடையும் இடம்* : பட்டுகொட வடக்கு கிராம எல்லைப் பாதை

**அட்டவணை**

| இடது பக்கம் | வலது பக்கம் | பாதையின் அகலம் (அடி) | பாதையின் நீளம் (அடி) |
|---|---|---|---|
| திரு. எச். எம். சனி சிசிரகுமார என்பவருக்குச் சொந்தமான பிஹில்லதன்ன வத்த | திரு. ஆர். ஜீ. ஆனந்தசிரி என்பவருக்குச் சொந்தமான பிஹில்லதன்ன வத்த | 8 | 613 |
| திரு. டி. ரீ. ஜீ. நிசங்க நிமால் என்பவருக்குச் சொந்தமான பிஹில்லதெனிய காணி | திரு. ஆர். ஜீ. ஆனந்தசிரி என்பவருக்குச் சொந்தமான பிஹில்லதன்ன வத்த | | |
| திரு. ஆர். கே. தயானந்த என்பவருக்குச் சொந்தமான பிஹில்லதன்ன கும்புற | திரு. ஏ. ஜீ. ஜயரத்ன என்பவருக்குச் சொந்தமான குருக்குதே ஹேனவத்த | | |
| திரு. ஆர். ஜீ. ஆனந்தசிரி என்பவருக்குச் சொந்தமான பிஹில்ல அங்க கும்புற | திரு. ஏ. ஜீ. கருணாதாச என்பவருக்குச் சொந்தமான குருக்குதே ஹேனவத்த | | |
| திரு. எம். ஆர். ஜீ. சோமரத்ன என்பவருக்குச் சொந்தமான வெலேகும்புற அல்லது வெலிகும்புற | திருமதி ஆர். ஜீ. விமலாவதி என்பவருக்குச் சொந்தமான வெலேகும்புற | | |

*10-655*

**கண்டி மாநகர சபை**

வரவு செலவுத் திட்டம் - 2011

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 212 (ஆ) ஆம் பிரிவின்படி 2011 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 2010 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி முகல் (07) ஏழு நாட்களுக்கு பொது மக்களின் பரிசீலனைக்காக கீழ்கானும் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளது என்பதை அறிவித்துக் கொள்கின்றேன்.

(1) மாநகர சபை கௌரவ உறுப்பினர்களின் அலுவலகம் மாநகா சபை, கண்டி ;
(2) கண்டி மாநகர சபை ஆணையாளர் அலுவலகம் ;
(3) பிரதான கணக்காளர் அலுவலகம், மாநகர சபை, கண்டி ;
(4) டீ. எஸ். சேனாநாயக்க ஞாபகார்த்த பொது நூலகம், கண்டி.

கே. எல். சுமிந்த விக்ரமசிங்க,
பதில் நகர முதல்வர்,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2010 ஒக்டோபர் 04 ஆம் திகதி.

10- 788/1

**கண்டி மாநகர சபை**

இடைக்கால வரவு செலவு அட்டவணை இலக்கம் 1 - 2010

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 214 (2) (ஆ) ஆம் பிரிவின்படி 2010 ஆம் நிதி ஆண்டிற்கான கண்டி மாநகர சபையின் இடைக்கால வரவு செலவுத் திட்டம் இலக்கம் 1, 2010 ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி முதல் (07) ஏழு நாட்களுக்கு பொது மக்களின் பார்வைக்காக கீழ்கானும் அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளது.

(1) மாநகர சபை கௌரவ உறுப்பினர்களின் அலுவலகம் மாநகர சபை, கண்டி ;
(2) கண்டி மாநகர சபை ஆணையாளர் அலுவலகம் ;
(3) பிரதான கணக்காளர் அலுவலகம், மாநகர சபை, கண்டி ;
(4) டீ. எஸ். சேனாநாயக்க ஞாபகாரத்த பொது நூலகம் கண்டி.

கே. எல். சுமிந்த விக்ரமசிங்க,
பதில் நகர முதல்வர்,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2010 ஒக்டோபர் 04 ஆம் திகதி.

10-788/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.